# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப் பொறுப்பின் பணிப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2009, மே மாதம் 07 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப் பொறுப்பின் பணிப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.*]

*ச.வ.ஒ. (கூட்) 7/2007*

**மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப் பொறுப்பின் பணிப் பாளர் சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

"மகாவலி கலாசாரமன்றம் நம்பிக்கைப் பொறுப்பு" என அழைக் கப்படுவதும் அறியப்படுவதுமான கம்பெனியொன்று சொல்லப் பட்ட கம்பெனியுடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் இதற்கென வலுவிலிருக்கும் விதிகளுக்கு இணங்க வும், அத்தகைய கம்பெனியின் அமைப்பு அகவிதி மற்றும் அமைப்பு புறவிதியை பயனுள்ளவகையில் நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காகவும், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட கம்பெனியின் அலுவல்களும் குறிக்கோள்களும் அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர் சபையி னால் முன்னர் இதற்கு வெற்றிகரமாக முகாமை செய்யப்படும் நிறைவேற்றப்பட்டும் வந்துள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபை கூட்டிணைக்கப் படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண்ணப் பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்காகவிருக்குமாத லாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுமாகுக :-

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப் பொறுப்பின் பணிப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும், அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நம்பிக்கைப்பொறுப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப் பொறுப்பின் தற்போதைய பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களும் சொல்லப் மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப் பொறுப்பின் பணிப்பாளர் சபையைக் கூட்டிணைத்தல்.

பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் உறுப்பினர்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப்பொறுப்பின் பணிப்பாளர் சபை" என்னும் பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான நோக்கங்கள்.

**3.** கூட்டுத்தாபனம் எந்தப் பொதுக் குறிக்கோள்களுக்காக அமைத்துருவாக்கப்படுகின்றதோ அந்தப் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) தற்போது நிர்மாணத்தின்கீழ் உள்ள புனித கொத்மலை மகாவலி மகாசேயாவைப் பூர்த்திசெய்தலும் அதன் பேணுகையையும் மறுசீரமைப்பையும் நிறைவேற்றுதலும்;

(ஆ) மகாவலி மகா சேயாவிலுள்ள பாரம்பரிய பௌத்த மத மற்றும் கலாசார அனுஷ்டானங்களை நிறைவேற்றுதலை உறுதிப்படுத்துதலும் மற்றும் அதற்கு வசதியளித்தலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள்பற்றி விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள் என்பவற்றை நடாத்துதலும் வெளியீடுகளை ஆக்குதலும் ;

(ஈ) புனித மகாவலி மகாசேயா அமைந்துள்ள மத்திய மாகாணத்திற்கு முன்னுரிமை அளித்து இலங்கை முழுவதும் உள்ள பௌத்த நிறுவனங்களுக்காக செயலாற்றுதல்;

(உ) பௌத்த சாசனத்தை முன்னேற்றுவதற்கு உதவுவதற்கான ஒவ்வொரு சாத்தியமான நடவடிக்கையை எடுத்தல் ;

(ஊ) பௌத்த மதத்தைப் பாதுகாத்தலும் அதனில் போதிக்கப்பட்ட நேர்மையான வாழ்க்கை முறையைப் பௌத்தர்களிடையே பிரபல்யப்படுத்துதலும் ;

(எ) பௌத்த சிறார்களின் கல்விச் செயற்பாடுகளை முன்னேற்றுதலும் அவர்களுடைய ஆன்மீக விழுமியங்களை முன்னேற்றுதலும் ;

(ஏ) இலங்கை மற்றும் வெளிநாடு ஆகிய இரண்டிலுமுள்ள பௌத்த அமைப்புக்களுடன் நட்புறவைத் தாபித்தல் ;

(ஐ) பௌத்தர்களின் கலாசார ஆளடையாளங்களைப் பாதுகாத்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**4.** (1) காலத்துக்குக் காலம் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டுக்குக் குறையாத வாக்குப்பெரும்பான்மை கொண்டு பின்வரும் விடயங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதவாக இல்லாத விதிகளை ஆக்குவது கூட்டுத்தாபனத்திற்கு சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது வெளியேற்றுதல் ;

(ஆ) பதவி தாங்குநர்களைத் தெரிவு செய்தலும், பதவி தாங்குநர்களின் பதவியை இராஜினாமாச் செய்தலும் அல்லது பதவியை வறிதாக்குதலும் அல்லது பதவியிலிருந்து அகற்றுதலும் அத்துடன் அவர்களுடைய தத்துவங்களும், கடமைகளும், ஒழுக்காறுகளும் ;

(இ) பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தலும் அத்துடன் பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களுடைய தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் மற்றும் பதவிக்காலமும் மற்றும் சபை உறுப்பினர்களின் வெற்றிடங்களை நிரப்புதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறுபட்ட அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் தத்துவங்களும் கடமைகளும் மற்றும் பணிகளும் ;

(உ) சபையின் கூட்டங்களை கூட்டுவதிலும் நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்களின் நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள் மற்றும் நிகழ்ச்சிநிரல், அதற்கான கூட்டநடப்பெண் மற்றும் அதன் அலுவல்களை நடாத்துதல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிர்வகித்தலும் மற்றும் முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதுபோன்ற அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**5.** (1) கூட்டுத்தாபனமானது (இதனகத்துப்பின்னர் “நிதியம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கொடை, இறுதிவிருப்பாவணக்கொடை, நன்கொடை, ஒப்படைப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியங்கள் என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபை தீர்மானிக்கக் கூடியவாறான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கி அல்லது வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம், தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று ஏதேனும் வங்கியில் அல்லது ஏதேனும் வேறு நிறுவனத்தில் நம்பிக்கைப்பொறுப்பின் வரவுக்கிருக்கும் எல்லாப் பணங்களும், இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து பயனுறுமாறு கூட்டுத்தாபனத்தின் நிதியத்திற்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதியத்தை மறுசீரமைக்கும், அபிவிருத்திசெய்யும் அத்துடன் மேம்படுத்தும், நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனமானது ஏதேனும் தேய்மான நிதியத்தை அல்லது கடனாழ் நிதியத்தைத் தாபிக்கலாம்.

(4) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலிலும் புரிதலிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட செலவினங்கள் யாவும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம் என்பன இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கும் அத்துடன் இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாகவும் 4 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கு இணங்கத் தெரிவுசெய்யப்பட்ட தவிசாளர், செயலாளர், பொருளாளர், பதில் தவிசாளர், பிரதிச் செயலாளர், பிரதிப் பொருளாளர் என்போரைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் சபையொன்றினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபையானது இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று பதவிவகிக்கும் நம்பிக்கைப் பொறுப்பின் பணிப்பாளர் சபையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*உறுப்பினர்களின் இடாப்பு.*

**7**. சபையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு ஒன்றைப் பேணுதல் வேண்டும். அதில் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று நம்பிக்கைப் பொறுப்பின் உறுப்பினராக இருந்த ஆள் ஒவ்வொருவரினதும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக இதனகத்துப்பின்னர் உரியமுறையில் சேர்த்துக் கொள்ளப்படும் ஆள் ஒவ்வொருவரினதும் பெயர் எழுதப்படுதல் வேண்டும்.

*குழுக்களின் நியமனம்.*

**8**. கூட்டுத்தாபனமானது, அதன் பணிகளை வினைத்திறமையாக நிறைவேற்றுவதற்காக, குழுக்களை நியமிப்பதற்கும் காலத்திற்கு காலம் அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஆன தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பினால் செலுத்தப் படவுள்ளனவும் நம்பிக்கைப் பொறுப்புக்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.

**9**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருந்துள்ள நம்பிக்கைப் பொறுப்பிற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப் படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய நாளன்று நம்பிக்கைப் பொறுப்பிற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத் தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**10**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தி னதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனமானது –

(அ) நிதியங்களைத் திரட்டுதலும், காசாக அல்லது பொருளாக மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகளைப் பெற்றுக்கொள்ளுதலும் ;

(ஆ) அசையும் அல்லது அசையாத ஏதேனும் ஆதனத்தை எத்தன்மையதுமான ஏதேனும் முறையில் கொள்ளு வதற்கும் வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், ஈடுவைப்பதற்கும், அடைமானம் வைப்பதற்கும் அல் லது விற்பதற்கும் அல்லது வேறுவகையில் கையுதிர்ப் பதற்கும் ;

(இ) மாற்றுண்டியல்கள் காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாதனங் களை ஆக்குவதற்கும், வரைவதற்கும், ஏற்றுக்கொள்ளு வதற்கும், கழிவு வழங்குவதற்கும், புறக்குறிப்பிடுவதற் கும், கைமாற்றுவதற்கும், வாங்குவதற்கும், விற்பதற்கும், வழங்குவதற்கும் ;

(ஈ) வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், நடாத்துதல் மற்றும் மூடிவிடுதல் அத்துடன் பிணைப்பொறுப்புடனோ அல் லது பிணைப்பொறுப்பின்றியோ பணத்தைக் கடனாகப் பெறுதலும், திரட்டுதலும் ;

(உ) சபை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாக தேவைப்படுத்தப்படாத ஏதேனும் நிதியத்தை முதலீடு செய்தல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அல்லது அதனால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் ஏதேனும் கட்டுமானத்தை அல்லது கட்டிடத்தை நிறுவுதல் அல்லது நிறுவச் செய்வித்தல் ;

(எ) ஏதேனும் ஆட்களுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் ஒப்பந்தங்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதல் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபன அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை நியமித்தலும், தொழிலுக்கு அமர்த்துதலும், பதவியிலிருந்து நீக்குதலும் அல்லது சேவையை முடிவுறுத்தலும் அத்துடன் அவர்களுக்கு கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடையை செலுத்துதலும்,

ஆகிய தத்துவங்கள் உட்பட, கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை அல்லது அந்நோக்கங்களில் ஏதேனுமொரு நோக்கத்தை முன்னேற்றுதல் அல்லது மேம்படுத்துதலுக்கு அவசியமான அல்லது உகந்ததான எந்த வகையிலானதுமான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் விடயங்களையும் கருமங்களையும் செய்வதற்கு, கொண்டு நடாத்துவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**11.** கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, இறுதி விருப்பாவணக் கொடை என்ற வகையில் அல்லது வேறு வகையில் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டத்தில் இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கணக்காய்வும் கணக்குகளும்.*

**12.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டா தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக் காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது,

(i) இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப் பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொரு வராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங் கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருளாகும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சனையானது எப்படிப் பொறிக் கப்பட வேண்டும் என்பது.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது "சபையின்" தவிசாளரினதும் செயலாளரினதும் அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆளினதும் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தானதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்த

மைக்கு அடையாளமாக அச்சானத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது சாட்சியொருவராக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதலும் வேண்டும்.

கலைப்பின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருக்கின்றவிடத்து, அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையும் அல்லது வேறேதேனும் நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். சபையானது கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அத்தகைய கலைப்பிற்கு முன்னர் அத்தகைய நிறுவனத்தை அல்லது நிறுவனங்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் அல்லது ஏதேனும் அரசியல் குழுவின் அல்லது கூட்டுத்தாபனத்தின் உரிமைகளைப் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*